பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 25 சனிக்கிழமை 10.08.2024 கதிர் 276

# மாகாண தேர்தல் திருத்த சட்டம் நிறைவேற்றத் தயார் நிலையில்

## உயர் நீதிமன்ற திருத்தங்கள் செய்யப்பட்டன

மாகாண சபைத் தேர்தல் திருத்தச்சட்டமூலத்தில் அவசியமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து, இச்சட்டமூலம் மீதான மூன்றாம் வாசிப்பு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் ஜூலை 6 இந்தத் திருத்தச் சட்டமூலம் இரண்டாம் வாசிப்புக்காகப் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதனையடுத்து இச்சட்டமூலம் நேற்று சட்டங்கள் தொடர்பான நாடாளுமன்றக் குழுவில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது, இச்சட்டமூலத்தில் உயர் நீதிமன்றத்தினால் குறிப்பிடப்பட்டிருந்த இரண்டு திருத்தங்களும் அங்கு செய்யப்பட்டன.

அதன்படி மேற்குறிப்பிட்டவாறு திருத்தங்கள் மேற்கொள்ளப் ☞ 2

# இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கப் போவதில்லை எனத் தீர்மானித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 8 இராஜாங்க அமைச்சர்கள் தமது பதவிகளை இராஜினாமா செய்யத் தயாராகி வருகின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆளும் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்காமல் இராஜாங்க அமைச்சர்கள் பதவிகளில் நீடிப்பது நெறிமுறைக்கு புறம்பானது எனக் கருதியே அவர்கள் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

டி.வி.சானக, தேனுக விதானகமகே, ஷசீந்திர ராஜபக்ஷ, அசோகா பிரியந்த, மொஹான் டி சில்வா, இந்திக்க அனுருத்த, பிரசன்ன ரணவீர, சிறிபாலகம்பலத் ஆகியோரே பதவி விலகத் தயாராகி உள்ளனர்.

தமது முடிவு தொடர்பல் அவர்கள் நேற்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை நேரில் சந்தித்துக் கலந்துரையாடினர். அதில் என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பது தொடர்பல் உடனடியாக அறிவிக்கப்படவில்லை.

....................

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு இப்போது ☞ 2

## களத்தில் குதிக்கிறார் முன்னாள் எம்.பி. திலகராஜ்ஜும்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நுவரெலிய மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ் களமிறங்கவுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணம் நேற்று செலுத்தப்பட்டுள்ளது.

தமிழ் பொது ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் அறிவிக்கப்பட்ட போதிலும், அவர்கள் மலையக மக்கள் குறித்து கவனம் செலுத்தவில்லை என நுவரெலிய மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ் தெரிவிக்கின்றார்.

மலையக மக்களின் பிரச்சினைகளை வெளிகொணரும் வகையிலேயே தான் இந்த தேர்தலில் போட்டியிட எண்ணியதாக அவர் கூறுகின்றார்.

## ஷானி அபேசேகரவின் பாதுகாப்பில் மாற்றமில்லை

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பை அதேபோன்று, ஒகஸ்ட் 29 வரை இடையூறு இன்றி தொடர்ந்தும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என சட்டமா அதிபர் நேற்று உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

தனக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பை பலப்படுத்த உத்தரவிடுமாறு கோரி ஷானி அபேசேகரவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி இதனைத் தெரிவித்தார்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, ☞ 8

## "13ஐ முற்றாக நிராகரிக்கிறேன்" பொதுவேட்பாளர் அறிவிப்பு

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தினைத் தான் முழுமையாக நிராகரிக்கிறார் என்று தெரிவித்துள்ளார் தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரன், தமது கொள்கை சமஷ்டியா அதற்கு அப்பாலானதா என்பதை தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பே தீர்மானிக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு உருவாக்கும் கொள்கை அறிக்கைக்கும், தனது கருத்துக்களுக்கும் இடையில் காணப்படுகின்ற இடைவெளிகள் சம்பந்தமாக கலந்துரையாடவேண்டியுள்ளதாகவும் வேட்பு மனுத்தாக்கலின் பின்னரேயே அந்த விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தனியார் தொலைக்காட்சியின் சமூக ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்பொதுவேட்பாளராக களமிறங்குவதில் எனக்கும், தவராசாவுக்கும் இடையில் போட்டிகள் நடைபெறவில்லை. நான் அவருடன் தொலைபேசியில் உரையாடியபோது அவர் களமிறங்குவதாக இருந்தால் கட்சி ரீதியான ☞ 8

### சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்பட்டுவரும்

## அரச சொத்துக்களை மீள ஒப்படைக்குமாறு இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு அறிவுறுத்து

அரசு சொத்துக்கள் சட்டவிரோதமாக பயன்படுத்தப்படுமானால் அவற்றை மீள ஒப்படைக்குமாறு இலஞ்ச மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களைவிசாரணை செய்யும் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

அரச பதவிகளை வகித்து வந்த சிலர் அப்போதைய காலக்கட்டத்தில் அரசினால் வழங்கப்பட்ட அசையும் மற்றும் அசையா சொத்துக்களை அவர்கள் பதவிகளை விட்டு விலகிய போதிலும் முறைகேடாக பயன்படுத்துகன்றனர் என்று முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அவ்வாறு சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுமாயின் அவற்றை உடனடியாக மீளப்பெறுவதற்கு உரிய நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என இலஞ்ச மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களைவிசாரணை செய்யும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபை பிரதம செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், திணைக்கள தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் அரசாங்கத்துடன் இணைந்த சட்ட ☞ 2

## 24.5 மில்லியன் டொலரை வழங்குகின்றது அமெரிக்கா

இலங்கையில் முதலீடுகளை அதிகரிக்கும் வகையில் அமெரிக்காவால் 24.5 மில்லியன் அமெரிக்க டொலர் உதவி வழங்கப்படவுள்ளது.

இலங்கை மக்கள் மற்றும் அவர்களுடனான எமது பங்காண்மை ஆகியவற்றில் நாம் நீண்டகாலமாக மேற்கொள்ளும் முதலீட்டை மேலும் அதிகரிப்பதற்காக அமெரிக்க மக்களிடமிருந்து 24.5 மில்லியன் அமெரிக்க டொலர் (7.2 பில்லியன் ரூபா) வழங்கப்படுள்ளது என்று அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

சர்வதேச ☞ 2

### அரசியல் பழிவாங்கல் குறித்து ஆராய்ந்த

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைக்குத் தடை உத்தரவு

அரசியல்பழிவாங்கல் தொடர்பில் ஆராய்வதற்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மற்றும் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் உபாலி அபேரத்ன ஆகியோரின் தலைமையிலான நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதை இரத்து செய்து உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்ன, ☞ 8

## தென்மாகாண ஆசிரியர் நியமனத்தில் தோட்டப் பாடசாலைகள் புறக்கணிப்பு

### நீதி கேட்கின்றனர் பெற்றோர்

தெற்குமாகாணத்தில் உள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கு பட்டதாரி ஆசிரியர் சேவைக்கு ஆட்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம் பிரதேச செயலக அடிப்படையில் கோரப்படுவதால் தமது அடிப்படை உரிமை மீறப்படுவதாக தோட்டப்புற பகுதிகளில் வசிக்கும் மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

இது தொடர்பாக தெரிய வருவதாவது.

இலங்கை ஆசிரியர் சேவைக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்யும்போது தென் மாகாண பெருந்தோட்டத் தமிழ்ப் பாடசாலைகள் புறக்கணிக்கப்ப டுகின்றன என்று பெற்றோர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பிரதேச செயலக அடிப்படையில் ஆசிரியர் சேவைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதனால் இந்த நிலமை ஏற்படுகின்றது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இலங்கை ஆசிரியர் சேவைக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்து வருகின்றது. பல கட்டங்களாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள ப்படுகின்றன. அண்மையில் கூட ஆங்கில பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப் பங்கள் தெற்கு மாகாண பொது சேவை ஆணைக்குழுவால் கோரப்பட்டிருந்தன. ஏற்கனவே நியமனம் வழங்கப்பட்ட ஏனைய ☞ 8

## கட்சித் தாவலைத் தடுக்க ஜேவிபி ஆட்சியில் சட்டம்

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் கட்சித் தாவலை கட்டுப்படுத்துவதற்கான புதிய சட்டம் கொண்டுவரப்படும் என்று கட்சியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பிரதான வேட்பாளர்களின் குடும்ப உறவுகள் காரணமாக இந்த தேர்தல் வித்தியாசமானது என தெரிவித்துள்ள அவர் இந்த ஒரு காரணத்திற்காகவே நீங்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

இந்தக்கட்சிகளில் ஒருபக்கத்திலிருந்து மற்றைய பக்கத்திற்கு தாவும் தவளைகள் நிறைய உள்ளன என தெரிவித்துள்ள அவர் கட்சி தாவலில் அவர்கள் ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சுக்கிரதிசை போலும் அதனால் தொடர்ந்து வெற்றிகளைக் குவித்து வருகின்றார்.

அவரால் முன்வைக்கப்பட்ட நாடாளுமன்ற தேர்தல் திருத்தச் சட்டமூலம், ஒரு தனிநபர் முன்மொழிவு என்பதால் நாடாளுமன்ற சட்டங்களுக்கான நிலையியற்குழுவில் ஆராயப்பட்டு உயர்நீதிமன்றத்தின் பரிந்துரைகளுக்கு ஏற்ப திருத்தங்கள் செய்யப்பட்டன.

முதலில் சட்ட முன்மொழிவுகள் குழுவில் ஆராயப்பட்டன. பின்னர் உயர் நீதிமன்றத்தனால் முன்வைக்கப்பட்ட சிறு சிறு திருத்தங்கள் இரண்டையும் சுமந்திரனே முன்வைத்தார். அவற்றை ஏற்றுக் கொண்ட குழுவினர் அந்தத் திருத்தங்களையும் செய்தனர். இதையடுத்து மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்ட மூலம் நிறைவேற்றுவதற்குத் தயாரான நிலைக்கு வந்துவிட்டது.

திருத்தப்பட்ட இந்தச் சட்டம் ஓகஸ்ட் 21 நாடாளுமன்றத்தில் மீண்டும் சமர்ப்பிக்கப்படும். செப்டெம்பர் 3 மூன்றாம் வாசிப்புக்கு எடுத்துக்கொள்ளப்படும். அப்போது சட்டம் மூலம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இது ஒரு வெற்றி.

அடுத்தது, ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரீன் பெர்னான்டோ மற்றும் மனுஷநாணக்கார ஆகிய இருவரும் கட்சி தாவிச் சென்று அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொண்டதற்கு எதிராக அவர்கள் மீது கட்சி எடுத்த நடவடிக்கை சரியானதுதான் என்று உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது. இதையடுத்து அவர்கள் இருவரும் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை இழந்துள்ளனர். அதனால் அமைச்சர் பதவிகளையும் இழக்கவேண்டி ஏற்பட்டுள்ளது.

இந்த வழக்கிலும் சுமந்திரனே ஐக்கியமக்கள்சக்தியின் சார்பில் வழக்காடியிருந்தார். ஏற்கனவே முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் அகட்டுக்கு எதிரான இதுபோன்றதொரு வழக்கிலும் சுமந்திரனே வழக்காடி வென்றிருந்தார். மொத்தத்தில் கட்சி தாவிய மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவிகளை அவர் பறித்துள்ளார்.

மூன்றாவதாக, தமிழ் அரசுக் கட்சிக்குள் அவரது தலைமைத்துவத்திற்கு எதிராக தீவிரமாக நின்று சிறிதரனுக்கு ஆதரவாகக் களமாடியவரான அரியநேந்திரன் பொது வேட்பாளர் என்ற பெயரில் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்புடன் இணைந்து கொண்டதை அடுத்து கட்சிக்குள் அவருக்கான எதிர்ப்பு கணிசமான சரிவைச் சந்தித்துள்ளது எனலாம். ஓகஸ்ட் 11 கட்சியின் மத்திய குழு வவுனியாவில் கூடுகின்றது. அந்தக் கூட்டம் அனேகமாக அரிநேந்திரனுக்கு ஆதரவாக அமையும் சாத்தியங்கள் உள்ளன. பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு எதிராக அன்றையதினம் கட்சி ஒரு தீர்மானத்தை எடுக்கக்கூடும். அதன் மூலம் அரியநேந்திரன் கட்சியைவிட்டு விலக்கப்படும் சூழலும் ஏற்படக்கூடும். ஆகமொத்தத்தில் கட்சியும் மீண்டும் அவரது தலைமையின் கீழ் வரும் வாய்ப்புக்கள் பிரகாசமாகிக் கொண்டிருக்கின்றன என்று சொல்லலாம்.

நான் அப்படிச் சொல்வதற்கு மற்றொரு காரணமும் உண்டும். அவரது தலைமைக்குச் சவால் விட்டு நின்றவர், முன்னணியின் தலைமையைப் பொறுப்பேற்பது குறித்து அதன் தலைவர்களுடன் பேசியிருக்கின்றார் என்றும் தகவல்கள் வருகின்றன. முன்னணியின் பிரதான கட்சித் தலைவர் நோய்வாய்ப்பட்டு மிக மோசமான நிலையில் இருப்பதால் முன்னணித் தலைமையைப் பொறுப்பேற்பது தொடர்பில் ஒரு சுற்று பூர்வாங்கச் சந்திப்பு இடம்பெற்றதாக அறியமுடிகின்றது. கட்சிக்குள் தனக்குத் தலைமைப் பதவியைத் தருவதற்குப் பின்னடித்தார்கள் என்றால் கட்சியைத் தூக்க எறிந்து விட்டுவருகின்றேன் என்று சொல்லப் பட்டிருப்பதாகவும் தெரிகிறது. எனவே தான் சுமந்திரனுக்கு இப்போது சுக்கிரதிசை போலும் என்று சொன்னேன்.

பார்க்கலாம் என்ன நடக்கின்றது என்று. அரசியலில் எதையும் நிலையானது என்று சொல்லிவிட முடியாது. திடீரென்று சனிமாற்றம் வந்தால் அதையும் ஏற்றுத் தானாகவேண்டும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மாகாண தேர்தல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட சட்டமூலம் எதிர்வரும் 21 ஆம் திகதி சட்டங்கள் தொடர்பான குழுவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும், அதனைத் தொடர்ந்து எதிர்வரும் செப்டெம்பர் 3 ஆம் திகதி இச்சட்டமூலம் மீதான மூன்றாம் வாசிப்பு இடம்பெறும் எனவும் அங்கு வாக்குளிப்பு கேட்டால் மட்டும் வாக்களிப்பு இடம்பெறும் னவும் அவர் குறிப்பிட்டார்.

## ஷானி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜித் மலல்கொட மற்றும் முர்து பெர்னாண்டோ ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த மனு பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் ஷானி அபேசேகரவின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய, பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகள் பாதுகாப்பு அதிகாரசபையின் பொலிஸ் குழு சமர்ப்பித்த அறிக்கையில், தனது சேவையாளரைக் கார் விபத்தின் மூலம் கொலை செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகத் தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக நீதிமன்றில் தெரிவித்திருந்தார்.

இதன்படி தற்போது அவருக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு போதுமானதாக இல்லை என ஜனாதிபதியின் சட்டத்தரணி தெரிவித்தார்.

அங்கு அரச சட்டத்தரணி நீதிமன்றத்தின் முன் உண்மைகளை முன்வைத்து மனுதாரரிடம் தனது வீட்டின் பாதுகாப்புக்காக இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும் மேலும் நான்கு அதிகாரிகள் பயணத்துக்காக நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

இந்த 6 பேரும் ஆயுதம் ஏந்தியே பணிபுரிகின்றனர் என்று அரசு வழக்கறிஞர் கூறினார். அப்போது ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய, தமது கட்சிக்காரருக்கு எதிரான அச்சுறுத்தல்களின் தன்மையை கருத்தில் கொண்டு இந்த பாதுகாப்பு போதுமானதாக இல்லை என தெரிவித்தார்.

பயணத்தின்போது பொலிஸ் மோட்டார் சைக்கிள் ஒன்று அவரது பாதுகாப்புக்கு வழங்கப்பட்ட போதிலும் அது விபத்தை தடுக்க போதுமானதாக இல்லை என ஜனாதிபதியின் சட்டத்தரணி தெரிவித்தார்.

இந்நிலையில், ஓகஸ்ட் 29க்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. மனுதாரரான ஷானி அபேசேகரவுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் பாதுகாப்பு அதிகாரசபையின் பொலிஸ் குழு சமர்ப்பித்த இரகசிய அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் சட்டமா அதிபருக்கு உத்தரவிடப்பட்டது.

## கட்சித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடும் கடைசி தடவை இதுதான் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் அரசியல் இதன் காரணமாகவே ஊழலில் சிக்குண்டது என மேலும் தெரிவித்துள்ள அவர் இதனை கட்டுப்படுத்துவதற்காக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சட்டங்களை கொண்டுவரும், 19வது திருத்தத்தில் இது தொடர்பில் சில விடயங்கள் காணப்பட்டன, விஜயதாச அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார் தினேஸ் குணவர்த்தன அதனை நீக்கவேண்டும் என்றார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மீண்டும் மக்களானை கோரும் தகுதியற்றவர்கள் ராஜபக்சக்கள்

## உதய கம்பன்பில எம்.பி. சாட்டையடி

மீண்டும் மக்களானை கோரும் தகுதியற்றவர்கள் ராஜபக்சக்கள் என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்

கொழும்பில் உள்ள ஐக்கிய குடியரசு முன்னணியின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்சக்கள் பொறுப்புக்கு கூற வேண்டும் என்று உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. ஆகவே மீண்டும் மக்களாணை கோருவதற்கு ராஜபகசக்களுக்கு எவ்வித தார்மீக உரிமையும் கிடையாது.

ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச உட்பட ராஜபக்சக்களின் குடும்ப உறுப்பினர்களின் அரசியலுக்காகவே பொதுஜன பெரமுன என்ற கட்சி உருவாக்கப்பட்டது.

அங்கு திறமையானவர்களுக்கு ஒருபோதும் முன்னுரிமை கிடையாது. இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரமேஷ்பத்திரன, காஞ்சன விஜேசேகர, செஹான் சேமசிங்க, பிரமித்த பண்டார தென்னகோன் ஆகியோர் உட்பட சிறந்தவர்கள் ராஜபக்ஷர்களை விட்டு விலகியுள்ளமை வரவேற்கத்தக்கது.

2022 ஆம் ஆண்டு எரிபொருள் தட்டுப்பாடு பிரச்சினையின்போது ராஜபசக்களின் குடும்ப உறுப்பினர் ஒருவர் என்னை சந்தித்து. எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு தீர்வுகாண ஒத்துழைப்பு வழங்குமாறு கோரினார். அப்போது வலையில் சிக்கிய புலியை பரிதாபப்பட்டு காப்பாற்றிய குரங்கை அடித்து கொன்று இரையாக்கிய புலியின் கதையை குறிப்பிட்டேன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இன்று இதே கதிதான் நேர்ந்துள்ளது. தம்மைப் பாதுகாத்த ஜனாதிபதி மீதே ராஜபக்சக்கள் பாய்ந்துள்ளார்கள்.

தமது தேவை நிறைவடைந்தவுடன் எவராக இருந்தாலும் ராஜபக்சக்கள் அவர்களை தூக்கி எறிவார்கள். 2014ஆம் ஆண்டு நான் அதை ஒரு படிப்பினையாக கற்றுக்கொண்டேன்.

நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா பல பில்லியன் ரூபாவை செலவு செய்து இந்த படிப்பினையை 2024ஆம் ஆண்டு கற்றுக்கொண்டுள்ளார். ராஜபக்சக்கள் தமது குடும்ப நலனை மாத்திரம் கருத்திற் கொண்டு செயற்படுவார்கள் என்றார்.

## 24.5 மில்லியன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் ஆசிய பணியகத்திற்கான உதவி நிர்வாகியான மைக்கல் ஷிஃபரின் இலங்கைக்கு வருகையின்போது நிதியமைச்சில் இடம்பெற்ற ஒரு நிகழ்வில் இந்த மேலதிக நிதியளிப்பு தொடர்பான அறிவிப்பு மேற்கொள்ளப்பட்டது.

அந்நிகழ்வில் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்ஹவுடன் யு.எஸ்.எயிட்டின் இலங்கை மற்றும் மாலைதீவிற்கான செயற்பணிப் பணிப்பாளர் கெப்ரியல் கிராவும் கலந்து கொண்டார்.

யு.எஸ்.எயிட்டிற்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான அபிவிருத்தி நோக்கத்திற்கான மானிய ஒப்பந்தத்தினூடாக உறுதியளிக்கப்பட்ட இந்நிதியானது இலங்கையின் சந்தை உந்துதலால் ஏற்படும் பொருளாதார வளர்ச்சியை பலப்படுத்தும், சுற்றுச்சூழலின் நிலைபேறான தன்மை மற்றும் அதன் மீண்டெழும் தன்மை ஆகியவற்றைப் பேணி வளர்க்கும் மற்றும் நல்லாட்சி நடைமுறைகளை ஊக்குவிக்கும்.

அரச நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகம் ஆகியவற்றுடன் எமக்கிருக்கும் பங்காண்மைகளின் ஒருவிளைவாக, இலங்கை மக்களின் வாழ்க்கையில் ஒரு நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்துகின்ற எமது கூட்டு முயற்சிகளுக்கு இந்த நிதி உதவி செய்கிறது.

இம்மேலதிக நிதியளிப்பின் மூலம் பொருளாதார வளர்ச்சி மற்றும் நல்லாட்சியில் முதலீடு செய்வதில் அமெரிக்க மக்கள் கொண்டுள்ள தொடர்ச்சியான அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டிய இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங்: 'அமெரிக்காவானது 1956 ஆம் ஆண்டு முதல் இலங்கை மக்களில் முதலீடு செய்துள்ளதுடன், தமது தொழில்முனைவு நோக்கங்களில் இலங்கை மக்களை வலுவூட்டுகின்ற, காலநிலை மாற்றங்கள் மற்றும் பேரினப்-பொருளாதார அதிர்ச்சிகளின் போதான இலங்கையின் மீண்டெழும் தன்மையினைப் பலப்படுத்துகின்ற, மற்றும் நாடு முழுவதுமுள்ள மக்களின் வாழ்வை வளப்படுத்துகின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

இம்மேலதிக நிதியளிப்பானது இலங்கையிலுள்ள எமது உள்ளூர் பங்காளர்களுடன் இணைந்து பணியாற்றுவதில் நாம் கொண்டுள்ள நிலையான உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகிறது. நாடு முழுவதுமுள்ள சமூகங்கள் நீடித்த ஸ்திரத் தன்மையினையும், செழிப்பான வாழ்க்கையினையும் அனுபவிப்பதற்கான ஒரு அடித்தளத்தை ஒன்றாக இணைந்து நாங்கள் உருவாக்குகிறோம்.' எனத் தெரிவித்தார்.

'இலங்கையுடனும் அதன் மக்களுடனும் எமக்கிருக்கும் பங்காண்மை குறித்து அமெரிக் காவும் அமெரிக்க மக்களும் பெருமையடைகிறார்கள்' என ருளுயுஐனு இன் ஆசிய பணியகத்திற்கான உதவி நிர்வாகியான ஷிஃபர் கூறினார்.

'இலங்கையின் அபிவிருத்திச் சவால்களுக்கான நிலைபேறான தீர்வுகளுக்கு ஒரு உந்து சக்தியினை வழங்குவதற்காக, உள்நாட்டில் வழிநடத்தப்படும் முன்முயற்சிகளுக்கு மேலும் உதவிசெய்வதற்கான ஒரு முதலீடாக இந்நிதியளிப்பு அமைகிறது.' என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையின் விவசாயம், கல்வி, சுகாதாரம், சுற்றுச்சூழல், நீர், துப்புரவுப்பணிகள், உட்கட்டமைப்பு, நிர்வாகம் மற்றும் வணிக அபிவிருத்தி மற்றும் தேவையுடைய மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குதல் ஆகியவற்றிற்கு உதவியாக 16956 ஆம் ஆண்டு முதல் 2 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் (ரூ.598 பில்லியன்) அதிகமான பெறுமதியுடைய உதவிகளை இலங்கைக்கு அமெரிக்கா வழங்கியுள்ளது.

கடந்த ஏழு தசாப்தங்களாக, இலங்கையின் டீசல் புகையிரதங்களை நவீனமாக்குதல்,

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# தேர்தலில் போட்டியிட 27 பேர் கட்டுப்பணம்

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட நேற்றுவரையில் 27 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் சார்பில் போட்டியிட 13 வேட்பாளர்களும், வேறு அரசியல் கட்சிகள் சார்பில் போட்டியிட 1 வேட்பாளரும், சுயேச்சையாக போட்டியிட 13 வேட்பாளர்களும் இவ்வாறு கட்டுப்பணம் செலுத்தியுள் ளனர் என்று தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

ஐதுருஸ் முஹம்மது இல்யாஸ், எம் திலகராஜா ஆகியோர் சுயாதீன வேட்பாளராக போட்டியிடக் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தலுக்காக கட்டுப்பணம் செலுத்தல் ஓகஸ்ட் 14 புதன்கிழமை வரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ள நிலையில் ஓகஸ்ட் 15 வியாழக்கிழமை காலை 9 மணி முதல் 11.30 மணிவரையான காலப்பகுதியில் வேட்பு மனுக்கள் ஏற்கப்படவுள்ளன.

தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் காலவகாசம் நேற்று நள்ளிரவுடன் நிறைவடைந்துள்ளது.

புதிய ஜனநாயக முன்னணி சார்பில் போட்டியிடுவதற்கு ஓசல ஹேரத்தும், இலங்கை தொழிலாளர் கட்சி சார்பில் ஏ.எஸ்.பி.லியகவேும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் சஜித் பிரேமதாசவும், தேசிய அபிவிருத்தி முன்னணி சார்பில் எஸ்.கே.பண்டாரநாயக்கவும், தேசிய ஜனநாயக முன்னணி சார்பில் விஜயதாஸ ராஜபக்ஷவும், ஐக்கிய சோஷலிச கட்சி சார்பில் சிறிதுங்க ஜயசூரியவும், புதிய சீஹல உருமய கட்சி சார்பில் சரத் மனமேந்திரவும்,

ஜனசேனா முன்னணி சார்பில் பத்தரமுல்லே சீலரத்ன தேரரும், அருனலு மக்கள் முன்னணியின் சார்பில் கே.ஆர்.கிறிஷானும், தேசிய மக்கள் சக்தி சார்பில் அனுரகுமார திஸாநாயக்கவும், சோசலிச சமத்துவ கட்சி சார்பில் பானி விஜேசிறிவர்தன, நவ சமசமாஜக் கட்சி சார்பில் பிரியந்த புஸ்பகுமாரவும், எங்கள் மக்கள் சக்தி சார்பில் ஜே.டீ.கே.விக்கிரமரத்ன ஆகியோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் என்ற ரீதியில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

அதேவேளை அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சி என்ற பிரிவில் ருஹுணு மக்கள் முன்னணி சார்பில் அஜந்த த சொய்சா கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க, சரத் கீர்த்திரத்ன, கே.கே.பியதாஸ, ஆனந்த குலரத்ன, அக்மீமன தயாரத்ன தேரர், சிறிபால அமரசிங்க, சரத் பொன்சேகா, அன்டனி விக்டர் பெரேரா, ஐதுருஸ் முஹம்மது இல்யாஸ், மானகே பேமசிறி, அனுர சிட்னி ஜவர்தன, டீ.எம்.பண்டாரநாயக்க, எம்.திலகராஜா, ஆகியோர் சுயாதீன வேட்பாளராக போட்டியிட கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்

காலைக்கதிர் Kalaikkathir

# ஒரு வயதுக்குக் கீழ்ப்பட்ட 25 சதவீதமான பிள்ளைகளுக்கு தூக்கமின்மை பிரச்சினை

## வைத்திய நிபுணர்கள் தெரிவிப்பு

ஒரு வயதுக்கு கீழ்ப்பட்ட 25 சதவீதமான பிள்ளைகள் தூக்கமின்மைபிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இது பல்வேறு உடல் மற்றும் மனநல பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் ஆலோசகர் வைத்தியர் இனோகா விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

நாட்டில் பிள்ளைகள் மத்தியில் தூக்கம் குறித்து அதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை என்றாலும்இ கிடைக்கக்கூடிய மட்டுப்படுத்தப்பட்ட தரவுகளின்படிஇ ஒரு வயதுக்கு கீழ்ப்பட்ட 25 சதவீதமான பிள்ளைகளுக்கு தூக்கமின்மை பிரச்சினை உள்ளது.

தூக்க சுகாதாரம் என்பது நல்ல தூக்கத்தை எளிதாக்கும் நடத்தைமற்றும்சுற்றுச்சூழல்நடைமுறைகளின்தொகுப்பாகும். இந்த காரணிகள் ஒரு நல்ல இரவு தூக்கத்திற்கு உதவும் பழக்கங்களாகும்.

முன்பெல்லாம் சூரியன் மறையும் போது தூங்கச் செல்வதும்இ சூரியன் உதிக்கும் போது விழிப்பதும் வழக்கமாக இருந்தது.

செயற்கை வெளிச்சத்தின் நீடித்த பயன்பாடு மற்றும் கைத்தொலைபேசிகள்இ கணினிகள்இ டெப்கள் மற்றும் தொலைக்காட்சி போன்ற சாதனங்களில் நேரத்தை செலவிடுவது மக்களின் தூங்கும் முறைகளில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

தூக்க முறைகளில் ஏற்படும் மாற்றங்கள் பல்வேறு உடல், மன மற்றும் சமூக பிரச்சனைகளை ஏற்படுத்துவதாக பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக பாடசாலை மாணவர்களுக்கு நிலையான நினைவாற்றல் இருக்க நல்ல தூக்கம் அவசியம் என்றார். எனவே பிள்ளைகள் நல்ல உறக்கத்தைப் பெறுவதை உறுதிப்படுத்துவது பெற்றோரின் பொறுப்பாகும்.

நல்ல தூக்கத்தைப் பழக்கப்படுத்த பல படி முறைகளை பின்பற்ற வேண்டும்.

தூங்கச் செல்லும் மற்றும் எழுந்திருக்கும் வழக்கமான நேரம்இ அவர்கள் தூங்கும் இடம்இ அவர்கள் தூங்கும் விதம்இ சுற்றுச்சூழல் நிலைமைகள் மற்றும் தூக்கத்தின் காலம். பெற்றோர்களும் பாதுகாவலர்களும் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல தூக்க பழக்கத்தை வளர்க்க உதவலாம்.

உலக சுகாதார ஸ்தாபனம் ஒவ்வொரு வயதினருக்கும் ஒரு நாளைக்கு எத்தனை மணிநேர தூக்கம் என்பது குறித்து பரிந்துரைகளை வழங்கியுள்ளது. பிறந்து மூன்று மாதங்களுக்கு குழந்தைகள் ஒரு நாளைக்கு 14 முதல் 17 மணி நேரம் தூங்க வேண்டும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரைத்துள்ளது.

4 மாதங்கள் முதல் ஒரு வருடம் வரை 12 முதல் 16 மணி நேரம் ஒரு வருடம் முதல் 2 வயது வரை 11 முதல் 14 மணி நேரம் 3 முதல் 4 வயது வரை 10 முதல் 13 மணி நேரம் 5 வயது குழந்தைக்கு 10 முதல் 12 மணி நேரம் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு 24 மணித்தியாலங்களில் 50 சதவீதத்திற்கும் அதிகமான உறக்கமும் தேவை. இது மன ஆரோக்கியத்தையும் மற்றும் உடல் வளர்ச்சியிலும் தாக்கம் செலுத்துமெனவும் வயதானவர்கள் குறைந்தது 7 மணிநேரம் உறங்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

பெற்றோர்கள் தூங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக டிஜிட்டல் திரைகளைப் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும்.

தற்போதுள்ள தரவுகளின்படிஇ இரண்டு வயதுக்குட்பட்ட பிள்ளைகள் டிஜிட்டல் திரைகளைப் பயன்படுத்துவது உகந்தது அல்ல.

பெற்றோர் அல்லது பாதுகாவலர்களின் மேற்பார்வையின் கீழ் 2 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் டிஜிட்டல் திரையை ஒரு நாளைக்கு அரை மணி நேரம் வரை பயன்படுத்தலாம்.

உரத்த சத்தம் மற்றும் பிரகாசமான வெளிச்சம் உள்ள பகுதிகளில் பிள்ளைகள் தூங்குவதை தவிர்க்க வேண்டும். ஏனெனில் இது அவர்களின் நல்ல தூக்கத்தையும் தூக்கத்தின் மூலம் ஏற்படும் வளர்ச்சி மற்றும் மூளை வளர்ச்சியையும் பாதிக்கும் என தெரிவித்துள்ளார்.

(05)

# சட்டவிரோத பீடி இலைகளுடன் ஒருவர் வென்னப்புவவில் கைது







வென்னப்புவ - அலுத்தொட்ட பொலிஸ் பிரிவில் சட்டவிரோதமான முறையில்நாட்டிற்குகொண்டுவரப்பட்ட 641கிலோ200கிராம்பீடிஇலைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வியாழக்கிழமை வென்னப்புவ பொலிஸார் மற்றும் கடற்படையினர் இணைந்துமேற்கொண்டசுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் 20 வயதுடைய அலுத்தொட்ட பிரதேசத்தை சேர்ந்தவர் ஆவார். இதேவேளை பொலிஸாரின் சுற்றிவளைப்பின் போது சில சந்தேக நபர்கள்தப்பியோடியதுடன்அவர்களை கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(05)

# போலி நாணயத்தாள்களை பயன்படுத்தி அகலவத்தையில் பொருள் கொள்வனவு

## தாய், மகள் உட்பட மூவர் கைது

போலி நாணயத்தாள்களை பயன்படுத்தி கடைகளில் பொருட்களைக் கொள்வனவு செய்த தாய். மகள் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அகலவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை பிரதேசத்தைச் சேர்ந்த தாயும் 16 வயதுடைய மகளும் வாடகை காரொன்றின் 43 வயதுடைய சாரதியுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மூவரும் புலத்சிங்கள கல்வெல்லாவ பிரதேசத்தில் உள்ள கடையொன்றில் 5,000 ரூபா போலி நாணயத்தாள் ஒன்றைக்கொடுத்துபொருள்களைக் கொள்வனவு செய்து மீதமுள்ள பணத்தையும் பெற்று வாடகை காரில் அகலவத்தை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கும் போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்துபோலிநாணயத்தாளை பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களும் விற்பனைசீட்டுக்களும்கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அகலவத்தை மத்துகம மற்றும்புலத்சிங்கள ஆகிய பகுதிகளில் நீண்ட காலமாகப் போலி நாணயத்தாள்களை பயன்படுத்தி கடைகளில் பொருள்களைக் கொள்வனவுசெய்துள்ளனர்எனபொலிஸ் விசாரணையில்தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அகலவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# கடும் காற்றால் பொன்னாலையில் பிடுங்கி வீசப்பட்டது வீட்டுக் கூரை

## 3 குடும்பங்கள் நிர்க்கதி



சங்கானை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம். கல்விளான் பகுதியில் புதன்கிழமை இரவு வீசிய கடும் காற்றால் வீட்டின் கூரையொன்று தூக்கி எறியப்பட்டதையடுத்து மூன்று குடும்பங்கள் நிர்க்கதியாகியுள்ளன.

மூன்று குடும்பங்களைச் சேர்ந்த ஒன்பது பேர் அந்த வீட்டில் வசித்து வந்த நிலையில் இந்த அனர்த்தம் காரணமாக அவர்கள் சுழிபுரம் திருவடிநிலை சைவத் தமிழ்க் கலவன் பாடசாலையில் தற்காலிகமாகத் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் அசம்பாவிதம் இடம்பெற்ற வீட்டிலிருந்த குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சா‘ாமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# மீண்டும் மீண்டும் தவறிழைக்கும் ஆளும்தப்பு

**நீதித்துறையுடனான மோதல் போக்கைக் கைவிடுவதில்லை என்பதில் ஆளும்தரப்புத் தீவிரமாக இருக்கின்றது. அரசுத் தலைவர் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்னர் நேரடியாகவும் வெளிப்படையாகவும்சவால்விட்டு இந்த மோதலைவெளிப்படுத்திய அரசுத் தலைவரும் ஆளும் தரப்பினரும் தேர்தல் அறிவிப்பு வெளியான பின்னர் அமைதியாகவும் கமுக்கமாகவும் அதனைச் செய்து வருகின்றார்கள் என்பது தெரிய வந்திருக்கின்றது.**

**இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு நுழைவு அனுமதியை வழங்கும் பணி வி.எவ்.எச் என்கிற தனியார் நிறுவனத்திடம் வழங்கப்பட்டது. அந்த நிறுவனம் வெளிநாட்டுச் சுற்றுலாவிஒருவரிடம்இருந்துகூடுதல்பணத்தைஅறவிடுகின்றது என்கிற குற்றச்சாட்டு எழுந்தது. இதையடுத்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது. வழக்கை ஆராய்ந்த நீதிமன்றம் அந்த நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ள அமைச்சவை எடுத்த முடிவை இரத்துச் செய்து இடைக்காலத் தடை உத்தவு பிறப்பித்தது. அந்தப் பணிகளை அரச தொலைத்தொடர்பு நிறுவனமான மொபிட்டலிடம் வழங்கும்படியும் உத்தரவிட்டது. ஆனால்அந்தஉத்தரவைஆளும்தரப்புநடைமுறைப்படுத்தவில்லை என்கிற குற்றச்சாட்டு இப்போது எழுந்துள்ளது.**

**ஏற்கனவே காவல் மா அதிபர் விவகாரத்திலும் உயர் நீதிமன்றம் வழங்கிய கட்டளையை நடைமுறைப்படுத்தாமல் இருந்து வரும் ஆளும் தரப்பினர் இப்போது சுற்றுலாவிகளுக்கான அனுமதி வழங்கலிலும் உயர் நீதிமன்றக் கட்டளையைப் புறந்தள்ளி நடக்கின்றது என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டியுள்ளார்.**

**”நாட்டின்ஆட்புலஎல்லையின்பாதுகாப்பைசவாலுக்குட்படுத்தும் வகையில் பாரதூரமான பிரச்சினைகளை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஏற்படுத்தியுள்ளது.வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை நாட்டுக்கு அழைத்தல் மற்றும் வேலையற்றோரை தொழில் வாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்தல் என்பவற்றை பொருளாதார மீட்சிக்கான திட்டங்களாக ஆளும்தரப்புக் கருதுகிறது.**

**வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை மற்றும் தொழில் வாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்கு செல்வோர் அதிகரிப்பு ஆகிய காரணிகளால் அரசின் வெளிநாட்டு கையிருப்பு அதிகரித்துள்ளது. அப்படியிருந்தும் இவ்விரு துறைகளும் பாரதூரமானநெருக்கடிகளைஎதிர்க்கொள்ளும்செயற்பாடுகளை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு முன்னெடுத்துள்ளது.**

**வி.எஸ்.எஸ். முறைமையிலான விசா விநியோகத்துக்கு எதிராக நான் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், ரவூப் ஹக்கீம் ஆகியோர் ஒன்றிணைந்து உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்தோம். புதிய விசா விநியோகித்தல் முறைமை செயற்பாடு மீது உயர்நீதிமன்றம் ஆவணி 2 அன்று இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்தது. இந்த வழக்கு எதிர்வரும் ஐப்பசி மாதம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. அதுவரை பழைய முறைமையில் விசா விநியோகத்தை முன்னெடுக்குமாறு நீதிமன்றம் அறிவுறுத்தியது. இருப்பினும் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.**

**உயர் நீதிமன்றத்தின் அறிவுறுத்தலையும் கவனத்திற் கொள்ளாது ஆளும்தரப்புச் செயற்படுகிறது. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் தன்னிச்சையாக செயற்படுகிறார். குடிவரவு திணைக்கள கட்டுப்பாட்டாளர் அரச அதிகாரி என்ற வகையில் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அதனை விடுத்து ஆளும்தரப்பின் தேவைக்கு அமைய செயற்பட்டால் அவருக்கு எதிராகவும் சட்ட ரீதியில் நடவடிக்கைகளை முன்னெடுப்போம்” என்றார் சம்பிக்க.**

**அவர் சொல்வதின் நியாயம் முக்கியமானது. நீதிமன்ற உத்தரவுகளைச் செயற்படுத்தாது ஆளும் தரப்பே அதனை உதாசீனம் செய்வது நீதிமன்றத்தின் மதிப்பை மக்கள் முன் மதிப்பிறக்கம் செய்வதற்குச் சமமானது. நீதித்துறை மீதான நம்பிக்கையை மக்கள் இழப்பதற்கு இது வழிவகுத்துவிடும். அவ்வாறுநடக்கக்கூடாது. ஆளும்தரப்பு உடனடியாக இந்த மோதல் போக்கை ஒரு முடிவுக்குக் கொண்–டுவந்து நீதித்துறையின் மீதான நம்பகத்தன்மையைப் பாதுகாக்க முன்வரவேண்டும்.**

# திறம்படப் பேசு

ஐவி.நாகராஜன்

நாம் பேசும் பேச்சில் நேர்மையும், நாம் பயன் படுத்தும் சொற்களில் தெளிவும் மிக அவசியமான ஒன்று. நம் பேச்சு உண்மையுள்ளதாகவும் அது



சரியான தகவல்களை சுமந்து வருவதாகவும் இருப்பது மிக முக்கியம். அதோடு அது கள்ளம், கபடம் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டதாக, வெளிப் படைத்தன்மையுடன் இருக்க வேண்டும். அவ்வாறு இருக்கும்போது மட்டுமே நம்முடைய பேச்சு முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படும்.

இத்தகைய பண்புகளில் குறை ஏற்படும்போது கேட்பவர்கள் நம்மை சந்தேகக் கண்ணுடன் பார்ப்பார்கள். நம் பேச்சின் ஓசை அவர்கள் காதுகளை எட்டினாலும் பேச்சின் பொருள் அவர்களின் மனதை எட்டாது. எனவே, நேர்மையான சொற்களால் நம்முடைய பேச்சை நிரப்ப வேண்டியது கட்டாயம்.

உண்மையான அனுபவங்கள், நிகழ்வுகள், தகவல்கள்நிரம்பிவழியும்போதுநம்முடையபேச்சின் மீதான ஈடுபாடு அதிகரிக்கும். நம்பிக்கையுடனும், தெளிவுடனும் சரியான குரல் ஓசையுடனும் நேர்மையாகப் பேசும்போது அந்தப் பேச்சு மிகுந்த வரவேற்பைப்பெறும். இன்றைய காலகட்டத்தில் நாம் என்றோ பேசிய சொற்கள்கூட நொடிப்பொழுதில் பிறர் காதுகளை எட்டிவிடும். முன்பு ஒரு முறை ஒரு கருத்தைப் பேசி, இப்போது வேறு விதமாகப் பேசினால் அந்த வித்தியாசத்தைக் கண்டுபிடித்து விடுவர்.

பேசும் சொல்லுக்கு ஈடாக பேசாத உடல் மொழி யும், திறம்படப் பேசுதலின் முக்கிய அங்கமாகிறது. எந்த அளவுக்குப் பேசும் சொற்களை மற்றவர்கள் கேட்கிறார்களோ, அந்த அளவுக்குப் பேசுபவரின் உடல் மொழியையும் கவனிக்கிறார்கள். குறிப் பாக முக பாவனைகள், சைகைகள், கண் தொடர்பு, பேசும் தோரணை, உடல் அசைவுகள், உட்கா ரும் முறை ஆகியவை உடல் மொழியைப் பறைசாற்றும். பேசுபவரின் ஈடுபாட்டை உடல் மொழி வெளிப்படுத்தும். உடல் மொழி சரியாக இருக்கும்போது மட்டுமே பேசும் சொற்கள் எதிர்பார்த்த பலனைத் தரும். ஒருவரின் உடல் தோற்றத்தைப் போன்றே அவரின் குரலும் அவரைப் பற்றிய பல தகவல்களை வெளிப்படுத்தும்.

இடத்துக்கு இடம் மக்களின் பழக்க வழக்கத்தைப் பொருத்தும் சொற்களின் பொருள் வேறுபடும். கவனக் குறைவாகப் பேசும் சொற்கள் நீங்காத துன்பத்தை வரவழைத்துவிடும். தனிப்பட்ட சூழலில் பேசுவதும், ஒரு குழுவிலோ, பொதுமக்கள் முன்னிலையிலோ பேசுவதும்நிறையவித்தியாசங்களைப்பெற்றிருக்கும். யாருடன் உரையாடுகிறோம் என்பதற்கேற்ப நம் சொற்களின் உச்சரிப்பு தொனி இருப்பது அவசியம்.

நாம் பேசும் தொனி நம்முடைய தனிப்பட்ட சிந்தனை, தன்னம்பிக்கை, அறிவின் ஆழம், மற்றவர்கள் மீது கொண்டுள்ள மரியாதை ஆகியவற்றை வெளிப்படுத்தும். சொற்கள் சரியாக இருந்தாலும் அந்தச் சொற்களைப் பேசும் தன்மை தவறாக இருந்துவிட்டால், வித்தியாசமான விளைவுகளைக் காண நேரிடும். உணர்ச்சிபூர்வமாக பேசுவதையும், அமைதியாகப் பேசுவதையும் கோபத்துடன் பேசுவதையும், வெறுப்புடன் பேசுவதையும்குரலின்தொனியேவெளிப்படுத்திவிடும். பெரும் பேச்சாளர்கள் தங்கள் சொற்களை உச்சரிக்கும் தொனிக்கு மிகுந்த முக்கியத்துவம் தருகின்றனர். கேட்பவர்களும், பேச்சாளரின் பேச்சுக்கு அதிக அக்கறை காட்டுகின்றனர். சரியான பேச்சே சொற்களின் அர்த்தத்தைச் சரியாக சென்றடைய வைக்கிறது. சொற்கள் தெளிவாகவும், கருத்துமிக்கதாகவும் இருக்கத் தகுந்த தயாரிப்பு கண்டிப்பாகத் தேவை.

‘இரண்டு மணி நேரம் உரையாற்ற வேண்டுமா? – இப்போதே நான் தயார். ஐந்து நிமிடம் உரையாற்ற வேண்டுமா? அதைத் தயாரிக்க இரண்டு வாரமாகும்” என்றார் பிரபல எழுத்தாளரும் பேச்சாளருமான மார்க் டிவைன். எல்லா சிறந்த பேச்சாளர்களும் முதலில் தடுமாற்றத்துடன்தான் தொடங்குகின்றனர். நாளடைவில் அவர்களின் தயாரிப்பின் ஆழம் அவர்களைப் பெரிய பேச்சாளர்களாக மாற்றுகிறது.

தயாரிப்பு உள்ளபோதுதான் தகுந்த சொற்களைத் தேர்வு செய்து திறம்பட எடுத்துரைக்க முடிகிறது. எந்தத் தருணத்தில் பேசினாலும் கேட்பவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் பேசவேண்டும். நம் அறிவின் ஆழத்தை மட்டுமே வெளிப்படுத்த முனைந்து, கேட்போருக்குப் புரியாத சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பேசினால் அந்தப் பேச்சால் எந்தப் பயனும் ஏற்படுவ தில்லை.

தெளிவாகப் பேசுவது பேச்சாளர் மீதான நம்பிக்கையை வளர்க்கும். கேட்பவர்கள் எல்லோரும் கேட்பதற்கு உகந்த குரல் ஓசையுடன் பேசவேண்டும். நாம் பேசுவதை எல்லோரும் கேட்க முடியாதபோது தேவையற்ற சலசலப்பு ஏற்படும். தெளிவான குரலில், தெளிவான சொற்களைப் பயன்படுத்திப் பேசுபவர்கள் நிலைத்து நிற்கிறார்கள். இன்று பலர் தயாரிப்பின்றி நிகழ்ச்சிகளில் பேசும்போது அரைகுறைத் தகவல்களைப் பேசுவதைக் காண்கிறோம். இவ்வாறு பேசுவதில் அவர்களின் அறிவின் ஆழம் அல்லது ஆழமின்மை மிக விரைவில் வெளிச்சத்திற்கு வந்துவிடும். உள்ளத்தின்ஆழத்திலிருந்து உண் மையான தகவல்கள் வரும்போது மட்டுமே நம் பேச்சு மெச்சப்படும்.

தடைகள் தகர்க்கப்படும், எளிமை நிலைகொள் ளும், தாக்கம் அதிகரிக்கும், உறவுகள் மேம்படும். சிந்தனையிலும், சொல்லிலும், செயலிலும் நேர்மையாக இருப்பவர்கள், மற்றவர்களை ஈர்க்கும் சக்தி பெற்றவர்களாக திகழ்கின்றனர். அவர்களது வார்த்தைகள் அதிக வல்லமையுடையவையாகத் திகழ்கின்றன. நேர்மை உடையவர்களே சமூகத்தால் மதிக்கப்படுகின்றனர், பின்பற்றப்படுகின்றனர். நேர்மை இல்லாமல் பேசுபவர்களைக் கண்டு மற்றவர்கள் ஒதுங்கியே செல்கின்றனர்.

எனவே, திறம்படப் பேசுவது மட்டும்மல்லாமல், நேர்மையுடன் பேச வேண்டியது கட்டாயமாகும். திறம்படப் பேசுதல் ஒருவர் வாழ்வில் வெற்றிகள் குவிப்பதற்குத் தேவையான அடித்தளமாகும்.

# 15 லட்சம் ரூபா பெறுமதியான தேக்க மரக்குற்றிகள் கடத்தல்



## இருவர் கைது

யாழ். தென்மராட்சி கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆசைப் பிள்ளை ஏற்றம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் சூட்சுமமாக மறைத்து கடத்திச் செல்லப்பட்ட மரக்குற்றிகளுடன் டிப்பர் வாகனம் ஒன்றை வியாழக்கிழமை காலை 9 மணியளவில் கொடிகாமம் பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன், இருவரை கைது செய்துள்ளனர்.

கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய கொடிகாமம் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியான பிரதான பொலிஸ் பரிசோதகர் சிவலிங்கம் பிரபாகரன் தலைமையின்கீழ் கொடிகாமம் பொலிஸ் நிலைய நிர்வாகப்பிரிவு பொறுப்பதிகாரியான தினேஸ் குணதிலக மற்றும் போக்குவரத்து பிரிவில் கடமையாற்றும் 44 ஆயிரத்து 209 பொலிஸ் இலக்கமுடைய பொலிஸ் சார்ஜன்ட் தம்பிராஜா தர்மரட்னம் என்போருடன் ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்களும் இணைந்து குறித்த கைது நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.



குறித்த, டிப்பர் வாகனத்தினுள் மரக்குற்றிகள் அடுக்கப்பட்டு அதற்கு மேல் சிறிய கற்கல் ஏற்றப்பட்டு சூட்சுமமான முறையில் கடத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியான 24 தேக்க மரக்குற்றிகளே கடத்திச்செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் சாரதி உட்பட இருவர் கைது செய்யப்பட்ட நிலையில் அவர்களை வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(05)

# கங்குவேலி ஆதி சிவன் ஆலய தீர்த்தோற்சவம்



(எச்.எம்.ஹலால்தீன் )

திருகோணமலை மாவட்டத்தில் வரலாற்றுச்சிறப்பு மிக்க கங்குவேலி ஆதிசிவன் ஆலயத்தின் தீர்த்தோற்சவ நிகழ்வு மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக பிதிர்கடன் ஆத்தமசாந்தி பிரார்த்தனை நிகழ்வும் மாபெரும் அன்னதானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வு இ.ஏகாம்பரம் பணிப்பாளரி சக்தி ஏற்பாட்டில் சமூகத்தொன்டு நிறுவனமான எம்கடமை அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (05)






கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# வெளிநாட்டுச் சிகரெட்டுக்களுடன் விமானநிலையத்தில் ஒருவர் கைது



சட்ட விரோதமாக வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ஒரு தொகை சிகரெட்டுகளை நாட்டிற்கு கொண்டு வந்த நபரொருவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட சிகரெட்டுக்களின் பெறுமதி சுமார் 42 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவாகும்.

கைது செய்யப்பட்டவர் 26 வயதுடைய நீர்கொழும்பு மகாஹுணுப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

இவர் வியாழக்கிழமை அதிகாலை டுபாயிலிருந்து வந்த விமானத்தின் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

அவரது பயணப்பொதியில் இருந்து 10 ஆயிரம் பிளட்டினம் வகை சிகரெட்டுக்கள் அடங்கிய 50 கார்ட்டூன்களும் 18,400 மன்செஸ்டர் வகை சிகரெட்டுகள் அடங்கிய 92 கார்டூன்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.



கைது செய்யப்பட்டவர் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 14 ஆம் திகதி குறித்த, நபரிடம் கைப்பற்றப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுக்களை நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் ஒப்படைக்கவுள்ளனர்.(05)

# வெலிமடையில் லொறி விபத்து ; சாரதி உட்பட இருவர் காயம்





வெலிமடை வீதியில் தங்கமலை பகுதியில் வியாழக்கிழமை இரவு வீதியை விட்டு விலகி லொறியொன்று விபத்துக்குள்ளாகியுள்ளதாக அப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறையிலிருந்து அப்புத்தளை வரை உள்ள வர்த்தக நிலையங்களுக்கு அரிசி மூடைகளை இறக்கிவிட்டு அட்டன் நோக்கிப் பயணித்த லொறியொன்றே விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது, லொறியின் சாரதி மற்றும் உதவியாளர் காயமடைந்து அப்புத்தளை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களின் உடல்நிலை கவலைக்கிடமாக இல்லை என வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த வீதி, செங்குத்தான மற்றும் வளைவுகள் கொண்ட பகுதி என்பதால் இந்த இடத்தில் கனரக வாகனங்கள் அடிக்கடி விபத்துக்குள்ளாகுவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.(05)



# உயர் நீதிமன்ற கட்டளையை மீள உதாசீனம் செய்தது ஆளும் தரப்பு

## நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க குற்றச்சாட்டு

வெளிநாட்டவர்களுக்கு விஸா வழங்கும் நடைமுறையில் உயர் நீதிமன்றத்தின் கட்டளையை உதாசீனம் செய்து ஆளும்தரப்புச் செயற்படுகின்றது என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபர் விவகாரத்திற்குப் பின்னர் இரண்டாவது தடவையாக இப்படி உயர் நீதிமன்றத்தின் கட்டளையை நடைமுறைப்படுத்தாது அளும் தரப்பு உதாசீனப்படுத்தி வருகின்றது.

கொழும்பில் உள்ள ஐக்கிய குடியரசு முன்னணியின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

நாட்டின் ஆட்புல எல்லையின் பாதுகாப்பை சவாலுக்குட்படுத்தும் வகையில் பாரதூரமான பிரச்சினைகளை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஏற்படுத்தியுள்ளது.வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை நாட்டுக்கு அழைத்தல் மற்றும் வேலையற்றோரை தொழில் வாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்தல் பொருளாதார மீட்சிக்கான திட்டங்களாக அரசாங்கம் கருதுகிறது.

வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை மற்றும் தொழில் வாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்கு செல்வோர் அதிகரிப்பு ஆகிய காரணிகளால் வெளிநாட்டு கையிருப்பு அதிகரித்துள்ளது.இவ்விரு துறைகளும் பாரதூரமான நெருக்கடிகளை எதிர்க்கொள்ளும் செயற்பாடுகளை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு முன்னெடுத்துள்ளது.

நாட்டின் ஆட்புல எல்லை தொடர்பில் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு வழங்கப்பட்டிருந்த பொறுப்பு மற்றும் அதிகாரம் கடந்த ஏப்ரல் மாதம் முதல் இந்திய நிறுவனத்துக்கு அமைச்சரவை அனுமதியுடன் வழங்கப்பட்டது.இதுவே அண்மைக்கால தேச துரோக செயற்பாடாகும்.

தேசப் பற்றாளர்கள் என்று குறிப்பிட்டுக் கொள்ளும் ஒரு தரப்பினர் நாட்டின் ஆட்புல எல்லை வெளிநாட்டு நிறுவனத்துக்கு வழங்கபட்டதை கவனத்திற் கொள்ளவில்லை.வி.எப்.எஸ் நிறுவனத்துடனான இந்த புதிய செயற்திட்டத்தால் பாரிய நிதி மோசடி செய்யப்படும் என்பதை உயர்நீதிமன்றத்துக்கு தரவு கட்டமைப்புடன் எடுத்துரைத்தோம்.

வி.எஸ்.எஸ் முறைமையிலான விசா விநியோகத்துக்கு எதிராக நான் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், ரவூப் ஹக்கீம் ஆகியோர் ஒன்றிணைந்து உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்தோம்.இந்த வழக்குக்கு சட்டத்தரணிகள் முன்னிலையாகவில்லை எமக்காக நாங்களே முன்னிலையானோம்.

வி.எஸ்.எப்.முறைமையிலான புதிய விசா விநியோகித்தல் முறைமை செயற்பாட்டுக்கு உயர்நீதிமன்றம் கடந்த 2 ஆம் திகதி இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்தது.இந்த வழக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.அதுவரை பழைய முறைமையில் விசா விநியோகத்தை முன்னெடுக்குமாறு நீதிமன்றம் அறிவுறுத்தியது.இருப்பினும் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.

உயர் நீதிமன்றத்தின் அறிவுறுத்தலையும் கவனத்திற் கொள்ளாது ஆளும்தரப்புச் செயற்படுகிறது. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் தன்னிச்சையாக செயற்படுகிறார்.குடிவரவு திணைக்கள கட்டுப்பாட்டாளர் அரச அதிகாரி என்ற வகையில் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.அதனை விடுத்து அரசாங்கத்தின் தேவைக்கு அமைய செயற்பட்டால் அவருக்கு எதிராகவும் சட்ட ரீதியில் நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்றார்.

### 24.5 மில்லியன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் திரிபோஷா குறைநிரப்பு போசாக்கு நிகழ்ச்சித்திட்டம், மின்சார வாகன மின்னேற்றல் நிலையங்களை விருத்திசெய்தல்மற்றும்பொருளாதார வளர்ச்சிக்கான உந்து சக்தியாக பெண் தொழில்முனைவோரை வலுவூட்டுதல் போன்ற பல விடயங்களுக்கு அமெரிக்கா உதவி செய்துள்ளது.

இலங்கையில் அமெரிக்கா மேற்கொள்ளும் அபிவிருத்திப் பணிகள் பற்றி மேலும் அறிந்து கொள்வதற்கு https://lk.usembassy.gov/மற்றும் hhttps://www.usaid.gov/srilanka ஆகிய இணையத் தளங்களைப் பார்வையிடுவதுடன், சமூக ஊடகங்களில் ShUSEmbassySL மற்றும் ShUSAIDSriLanka ஆகியவற்றைப் பின்தொடரவும்.

### தென்மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடங்களுக்கும் இதுபோன்று பிரதேச அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டன.

பெருந்தோட்டப் பகுதிகள் அடங்கும் பிரதேச செயலகங்களில் பட்டதாரிகளின் எண்ணிக்கை வெகு குறைவாகவே இருப்பதன் காரணத்தால் தோட்டப்புறப் பாடசாலைகளிற்கு எந்தவொரு ஆசிரியரும்இந்தநியமனத்தின்போது நியமிக்கப்படவில்லை என்று பெற்றோர் தெளிவுபடுத்துகின்றனர். இதனால் தென்மாகாண தோட்டப் பகுதிகளில் பாடசாலைகளை நடத்தி செல்வதில் பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரிகள் எவரும் பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படவில்லை. இது தொடர்பில் அதிபர்களால் ஆசிரியர் களால் கேள்வி எழுப்பப்பட்டபோது பெருந்தோட்ட பகுதிகளில் பட்டதாரிகளால் இல்லாமையினால் அங்கு பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க முடியாதுள்ளது என தெரிவிக்கப்பட்டது. இதனால் தமது பகுதி மோசமாக பாதிக்கப்படுவதாக மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

பல்கலைக்கழக அனுமதி உட்பட்ட கோட்டா முறைகள் பிரதேச செயலக முறைமையில் கோரப்படுவதில்லை. அது மாகாண அடிப்படையில் கோரப்படுகின்றது. ஆனால் ஆட்சேர்ப்பு மட்டும் பிரதேச செயலக அடிப்படையில் கோரப்படும்போது குறித்த பிரதேசத்தில்பொருத்தமானஆளணி இல்லாதபட்சத்தில்அப்பிரதேசம்அரச சேவையைபெறதகுதியற்றதாஎன்ற கேள்வியே எமக்கு எழுகின்றது என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். நாம் பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் கல்வியை பெறும் ஒரு சமூகம் என்பதால் தொடர்ந்தும் இவ்வாறானபாகுபாடுக்குஉட்படுதல் விரக்தியையே அளிக்கின்றதாக மக்கள் கவலை வெளியிடுகின் றனர்.

தாம் தமது பிள்ளைகளை வெளி யில் அனுப்பி படிப்பிக்க வசதி யற்றசமூகமாகஇருப்பதால்ஆசிரியர் பற்றாக்குறையால் தமது பிள் ளைகள் மோசமாக பாதிக்கப்ப டுகின்றனர் என்றும் பெற்றோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்விடயத்தில் மனித உரி மைகள் ஆணைக்குழு, அரசியல் வாதிகள்ஆசிரியர்சங்கள்தலையிட்டு தமக்கான நியாயத்தை பெற்றுத்த ரவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

### 13ஐ முற்றாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினைகள் காணப்படுகின்றன என்று கூறியிருந்தார். அதன் பின்னரேயேநான்களமிறங்கினேன் என்றும் அரியநேத்திரன் தெரிவித்தார்.

### அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைகளின் தலைவர்களுக்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊழல் தடுப்புச் சட்டப் பிரிவு 41 மற்றும் 111ஆவது சரத்துக்களின் பிரகாரம் எவரேனும் ஒருவர் சட்டத்திற்கு அமைவாக அரச சொத்துக்களை ஒப்படைக்காமல் இருப்பது தண்டனைக்குரிய குற்றம் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி பத்மினி ரணவக்க, சந்தியா எக்னலிகொட, குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர உள்ளிட்ட 9 தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான தீர்ப்பை உயர்நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

விஜித் மலல்கொட, அச்சல வெங்கப்புலி மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய உயர்நீதிமன்ற நீதியசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த நீதியரசர்கள் குழாம் அனைத்து மனுதாரர்களுக்கும் வழக்கு கட்டணமாகதலா150,000ரூபாவை அரசு செலுத்தவேண்டும் எனவும் உத்தரவிட்டது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



## தான் வெட்டிய மரத்திற்கு அடியில் சிக்கியவர் சாவு

பலாங்கொடை, ஹல்பே பிரதேசத்தில் மரமொன்றை வெட்டிய நபரொருவர்தான்வெட்டியமரத்திற்கு அடியில் சிக்கி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சமனலவௌ, ஹல்பேபிரதேசத்தைச் சேர்ந்த 61 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

இவர் இந்த மரத்தை வெட்டும் பணியில் ஈடுபட்டிருந்த போது மரத்திற்கு அடியில் சிக்கி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

## 1,050 டெங்கு நோயாளர் ஒன்பது நாள்களில் பதிவு



நாட்டில் கடந்த ஒன்பது நாள்களில் 1,050 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலங்களில் 148 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மொத்தமாக 33 ஆயிரத்து 795 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேல் மாகாணத்தில் இதுவரையில் அதிகளவாக 13 ஆயிரத்து 685 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் ஆண்டு இதுவரை டெங்கு நோயால் 14 பேர் உயிரிழந்துள்ளனர். (05)

## உள்நாட்டுத் துப்பாக்கியுடன் அம்பாறையில் இளைஞன் கைது

அம்பாறை, பொத்துவில் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் இளைஞன் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி, தர்மபுரம் பகுதியில் வசிக்கும் 24 வயதுடைய இளைஞரொருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக அம்பாறை லாஹுகல வனஜீவராசிகள் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

(05)

## மன்னாரில் விபத்தில் படுகாயமடைந்த வயோதிபர் சிகிச்சை பயனின்றி இறப்பு

மன்னார்-தலைமன்னார்பிரதானவீதி, ஜே.ஆர்.எஸ். அலுவலகத்திற்கு முன்பாக புதன்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் படுகாயம் அடைந்த வயோதிபர் ஒருவர் வியாழக்கிழமை மாலை யாழ். போதனாள வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

கடந்த புதன்கிழமை மாலை பாடசாலை முடிவடைந்து தனது பேரனை சைக்கிளில் ஏற்றிக் கொண்டு வீடு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த 67 வயதுடைய வயோதிபர் மீது அவர் வீதியூடாக அதிவேகமாக பயணித்த கூலர் வாகனம் மோதி விபத்தை ஏற்படுத்தியது.

இதன்போது, காயமடைந்த பேரனான மாணவனும், வயோதிபரும் உடனடியாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டபோது, வியாழக்கிழமை மாலை 67 வயதுடைய வயோதிபர் சிகிச்சை பலனின்றி யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

மேலும், கூலர் வாகனத்தின் சாரதியை கைது செய்த மன்னார் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)

### தேர்தல் காலங்களில் வெளிவரும்

## போலி விளம்பரங்கள் தொடர்பில் கவனம்





தேர்தல்காலங்களில்வெளிவரும் போலி விளம்பரங்கள் தொடர்பில் அவதானமாகஇருக்குமாறுஇலங்கை கணினி அவசர தயார்நிலை குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காகத் தேர்தல் ஆணைக் குழுவினரால் பல்வேறு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படுவதாக பல்வேறு விளம்பரங்கள் வெளியாகி வருகின்றன.

எனவே, பொதுமக்கள் அனைவரும் இத்தகைய போலி விளம்பரங்களை அழுத்திப் பார்வையிடுவதற்கு முன்னர் சிந்தித்துச்செயற்படுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான போலி விளம்பரங்கள் இணையவழி மோசடிகளாகவும் இருக்கலாம் என இலங்கைகணினிஅவசரதயார்நிலை குழு தெரிவித்துள்ளது.(05)



## சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த 5 டிப்பர்கள் சாவகச்சேரியில் சிக்கின

### ஐவர் கைது



யாழ். சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தனங்கிளப்பு பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற ஐந்து டிப்பர் வாகனங்களை சாவகச்சேரி பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் ஐவரை கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையில் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையில் வியாழக்கிழமை மூன்று டிப்பர் வாகனங்களும் புதன்கிழமை இரண்டு டிப்பர் வாகனங்களும் கைப்பற்றப்பட்ட நிலையில் ஐந்து சந்தேக நபர்களும் கைதாகியுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் வியாழக் கிழமை சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட நிலையில் ஒருவர் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (O5)

## 30 வருட தாதிய சேவை பூர்த்தி சிவநாதனுக்குப் பாராட்டு விழா







(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்தியசாலையில் 30 வருட தாதிய சேவையைப் பூர்த்தி செய்து ஓய்வு பெறும் காரைதீவைச் சேர்ந்த தாதிய உத்தியோகத்தர் கந்தசாமி சிவநாதனுக்கு பிரியாவிடை நிகழ்வு வைத்தியசாலையில் வியாழக் கிழமை நடந்தது .

வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ரங்கே சந்திரசேன தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எம். சமீம் நிருவாக உத்தியோகத்தர் ரி.தேவஅருள் தாதியபரிபாலகர் ரி.சசீந்திரன் உள்ளிட்ட பலரும் பாராட்டி உரையாற்றினார்கள்.

சிவநாதன் கடந்த முப்பது வருட காலமாக பல பிரிவுகளில் கடமையாற்றி இறுதியாக சத்திர சிகிச்சை பிரிவில் பொறுப்பு தாதிய உத்தியோகத்தராக சேவை ஆற்றியதை ஒட்டி அவருக்கு பொன்னாடை போர்த்திபரிசுகளும் வழங்கப்பட்டன.

வைத்தியசாலை ஊழியர்கள் நிகழ்வில் கலந்து பாராட்டினர். (O5)



# காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான இறுதிக் கட்டப் பதிவுகள் நேற்று நடந்தன





காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தால் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான இறுதி கட்டப் பதிவுகள் நேற்று (வெள்ளிக்கிழமை) வவுனியா பிரதேச செயலகத்தில் இடம்பெற்றன.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர்தொடர்பானஅலுவலகத்தின்பிரதானிகள்கலந்து கொண்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களிடம் இறுதிகட்டப்பதிவுகளைமேற்கொண்டதோடுவிடயங்களையும் கேட்டறிந்திருந்தனர்.

இதன்போது 62 பேருக்கு கடிதங்கள் தபால் மூலமாகவும் கிராம சேவையாளர் ஊடாகவும் அனுப்பப்பட்டு இந்த பதிவு நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுமாறு காணாமல் ஆக்கப்பட்ட அலுவலகத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த காணாமல் ஆக்கப்பட் டோரின் உறவினர் ஒருவர் -

எதிர்வரும் மாதம் அளவில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக அவர்களுக்காக நஷ்ட ஈடும், சான்றிதழும் வழங்குவதற்கு காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் நடவடிக்கை எடுத்திருப்பதாக தங்களிடம் அவர்கள் தெரிவித்தார் எனவும் கூறியிருந்தார்.

(05)



காலைக்கதிர் Kalaikkathir

# கனடா எழுத்தாணி பிரதிநிதிகளுக்கு மாலை அணிவித்து வரவேற்பளிப்பு





(வி.ரி. சகாதேவராஜா)

ஒன்லைன் கல்வி வசதியை இலவசமாக வழங்கும் கனடா எழுத்தாணி பிரதிநிதிகளுக்கு லுணுகலையில் கொழுந்து மாலை அணிவித்து வரவேற்பளிக்கப்பட்டது .

கனடாவைச் சேர்ந்த அஜந்தன்கௌரி அஜந்தன் தம்பதியினரின் புதல்வி அஜேனி எழுத்தாணி அமைப்பின் ஊடாக மலையக மாணவர்களுக்கு இணையத்தில்கல்விகற்பிக்கும் ஆசிரியை.

அவர் அங்கிருந்து கணிதம் விஞ்ஞானம் ஆங்கிலம் ஆகிய பாடங்களை ஒன்லைன் மூலம் தரம் 6 தொடக்கம் 11 வரை நடத்தி வருகின்றார்.

அதன் முன்னேற்றத்தை அளவிட அவர் அவரது குடும்பத்துடன் லுணுகலை ஹொப்டன் வருகை தந்த போது இந்தவரவேற்புஅளிக்கப்பட்டது.

எழுத்தாணி கனடாவில் இருந்துவந்த அவர்கள் ஹொப்டன் கலைமகள் வித்தியாலயத்தில் மாணவர்கள் பெற்றோர்கூட்டத்தைநடத்தினர்.

நளினி முத்துலிங்கம் எழுத்தாணி கனடாவில் இணையக் கல்வி மலையக மாணவர்களுக்கு கொடுக்கும் பணிப்பாளர். ஆசிரியை மற்றும் அவர்களின் பெற்றோர் உறுப்பினர்கள் எல்லோரும் வருகைதந்தார்கள்.

பாடசாலை அதிபர் வடிவேல் நிரோஜன் மேலும் பல வேண்டுகோள் விடுத்தார் . அதை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். (05)

# மத்திய முகாம் சார்க் அலுவலகத்திற்கு கணினி உபகரணங்கள் வழங்கிவைப்பு



(றாசிக் நபாயிஸ்)

நாவிதன்வெளி பிரதேச செயலக மத்திய முகாம் - 02 கிராம சேவகர் பிரிவில் சுமார் 14 வருட காலமாக இயங்கிவரும் நிலைபேறான விவசாய வளங்களின் நிலையம் (சார்க்) அலுவலகத்திற்கு கனணி உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு சார்க்நிறுவனத்தின் முகாமையாளர் இ.இதயகுமாரின் ஒருங்கிணைப்பில் சார்க் அமைப்பின் வளாகத்தில் அதன் தலைவர் எஸ். புலேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.



14 வருட காலமாக கொமர்ஷல் வங்கியுடன் இணைந்து இலங்கை மத்திய வங்கியால் விவசாயிகளுக்கு விஷேடமாக வழங்கப்படுகின்ற கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள் இச்சார்க் அமைப்பினர்.

இவ்வாறானசெயற்பாடுகளைவிருத்திசெய்யவும், அலுவலக வேலைகளை இலகுபடுத்திகணினிமயப்படுத்தி வெற்றிகரமாக நடத்தி செல்லும் நோக்கிலும் இக்கணினி உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட கொமர்ஷல்வங்கியின்பிராந்திய முகாமையாளர் ஆர்.கஜரூபன்,

கௌரவ அதிதிகளாக சார்க் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி இ. சந்திரசேகரன், கல்முனை

கொமர்ஷல் வங்கியின் கிளை முகாமையாளர்

சி. பேபியன், மட்டக்களப்பு மாவட்ட கொமர்ஷல் வங்கியின் பிராந்திய காரியாலய அதிகாரி வீ.சம்பத், கொமர்ஷல்வங்கியின்தலைமைக் காரியாலய கடன் பிரிவுக்கு பொறுப்பான எஸ். செந்தூரன், ரி. அனோஜ்போன்றோர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

சிறப்பு அதிதிகளாக மத்திய முகாம் - 02ஆம் பிரிவின் கிராம சேவகர் கே. கெப்ரியல், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜீ. விஜிதா ஆகியோர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் பெறுமதியான கணினி உபகரணங்களை சார்க் நிறுவனத்தின்



தலைவர் எஸ். புலேந்திரனிடம் இந்நிகழ்வின் பிரதம அதிதி மட்டக்களப்பு மாவட்ட கொமர்ஷல் வங்கியின் பிராந்திய முகாமையாளர் ஆர். கஜரூபனால் வழங்கி வைக்கப்பட்டது.

இதில் சார்க் நிறுவனத்தின் பயனாளிகள் என பலர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தார்கள்.(05)

# சிறப்பாக நடைபெற்ற மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலய நாக சதுர்த்தி வழிபாடு!




(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன்ஆலயத்தில்நாகசதுர்த்திவிரத விசேட வழிபாடு வியாழக்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற்றது .

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் வழிகாட்டலில் ஆலய குரு சிவஸ்ரீ ச.கோவர்த்தன சர்மா தலைமையில் நாக சதுர்த்தி விரத விசேட வழிபாடு பூஜை நடைபெற்றன.

ஆலய பரிபாலன சபை தலைவர் கலாநிதி கே.ஜெயசிறில் தெரிவிக்கையில் - மீனாட்சி அம்மன் சந்நிதி யில் நாகம் வாழ்கின்ற சிறப்பு மடத்தடி யில்தான் அமைந்துள்ளது. அந்த வகையில் இந் நாகசதுர்த்தி ஆலயத் தில் இன்று சிறப்பாக அனுஸ்டிக் கப்பட்டுள்ளது. ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு நாக வழிபாடு செய்தனர். என்று தெரிவித்தார்.

விசேடமாக அமெரிக்க மனித நேய அமைப்பின் இலங்கை பிரதிநிதி திருமதி சாந்தி சிரஞ்சீவி பரோபகாரி கனடா(காரைதீவு) அகிலன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (05)

# கலைமகளில் கோலாகலமாக நடைபெற்ற திறன் வகுப்பறைத் திறப்பு விழா நிகழ்வு




(சகா தேவராஜா)

நவீன கற்பித்தல் முறையை ஊக்குவிக்கும் நோக்கில் சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட வேப்பையடி கலைமகள் மகா வித்தியாலயத்தில் மனிதநேயம் நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையில்விஞ்ஞானஒன்றியம் மட்டு அம்பாறை அமைப்பின் ஒருங்கிணைப்பில் 1.1 மில்லியன் பெறுமதியான திறன் வகுப்பறை திறப்பு விழா வியாழக்கிழமை அதிபர் எஸ்.தியாகராஜா தலைமையில் நடைபெற்றது.

அமரர் கலாநிதி சுதன் சுதர்சன் நினைவாக சுமதி சுதர்சன், ஷோபனா சுதர்ஷன், நீலன் சுதர்சன் ஆகியோரின் நிதியுதவியில் (1,163,150 ரூபா) இந்திறன் வகுப்பறை மனிதநேய அறக்கட்டளைஸ்தாபகதலைவர் கை.அரவிந்தனின் ஏற்பாட்டில் திறந்துவைக்கப்பட்டது.

அதிதிகளாக மனிதநேய அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளர்களான ஆர். சிரஞ்சீவி, திருமதி சாந்தி சிரஞ்சீவி , உதவிக் கல்விப் பணிப்பாளர் வீ.ரி.சகாதேவராஜா மற்றும் அம்பாறை விஞ்ஞான ஒன்றிய ஸ்தாபக தலைவர் தி.கோபிநாத், ஸ்தாபகர் பொறியியலாளர் வ.யதுர்சன், ஆசிரியஆலோசர்களானஎஸ்.மோகன், ஆர்.சந்திரகுமார் உள்ளிட்டவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்கே.மதிவண்ணன், பழைய மாணவர்மன்றதலைவர்லோஷனன், விஞ்ஞான ஒன்றிய உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மனித நேயம் அமைப்பின் இச் சேவையை பாராட்டி பாடசாலை சமூகத்தால் திரு.திருமதி சிரஞ்சுவி தம்பதியினர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் விஞ்ஞான ஒன்றியம் மட்டு அம்பாறை அமைப் பால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாாகி 10.08.2024இல் வெளியிடப்பெற்றது